# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.

**Calendar** : **Case No.136/2013**
**Miscellaneous** :
**Summary Trial** :
**Maintenance** :
**Deposition of witness for prosecution** : **P.W.1.காசிமாயன்**

**Father's Name** : **ராமச்சந்திரன்**

**Village** :

**Taluk** :

**Caste** :

**Calling** :

**Religion** :

**Age** :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of

**05.09.2019**

மு.வி:

நான் கருமாத்தூரில் வசித்து வருகிறேன். நான் செல்லம்பட்டியில் உரம்பூச்சி மருந்து கடை வைத்துள்ளேன். நான் 03.04.2014 ஆம் தேதி வழக்கம்போல் என்னுடைய கடையை அடைத்துவிட்டு வீட்டிற்கு சென்றேன். அப்போது கடையில் கல்லாப்பெட்டியில் ரூபாய் 15 ஆயிரம் இருப்பு வைத்துவிட்டு சென்றேன். என்னுடைய மகன் சென்னையிலிருந்ததால் அவரை பார்ப்பதற்காக சென்னை சென்றுவிட்டு மீண்டும் 11.04.2014 ஆம் தேதி வந்து கடையை பார்த்தபோது என்னுடைய கடையின் இரண்டு பூட்டுகளும் நசுக்கி உடைக்கப்பட்டிருந்தது. கடையின் உள்ளே சென்று பார்த்தபோது கடையின் வடக்குபுற சுவர் 4 சிறிய துவாரம் போடப்பட்டிருந்தது. என்னுடைய கடைக்கு வடக்கு பக்கம் கோபால் ஜவுளிக்கடை மற்றும் நகைக்கடை உள்ளது. அந்த கடைக்கு ஆட்கள் செல்ல முடியாததுபோல் இருந்தது. என்னுடைய கடையில் பொருட்கள் வைத்த இடத்தில் இருந்தது. ஆனால் கல்லாப்பெட்டியிலிருந்த ரூபாய் 15 ஆயிரத்தை திருடிச்சென்றிருந்தது தெரியவந்தது. இது சம்மந்தமாக நான் செக்கானூரணி காவல் நிலையம் சென்று நடவடிக்கை எடுக்குமாறு புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையெழுத்து மற்றும் புகார் என்னுடையது தான். புகார் மனு **அ.சா.ஆ.1.** சுமார் 3, 4 மாதங்கள் கழித்து தகவல் சொல்லிவிட்டு நீதிமன்றத்திலிருந்து பணத்தை பெற்றுக்கொள்ளுமாறு சொன்னதால் நான் நீதிமன்றத்தில் மனு செய்து என்னுடைய பணத்தை பெற்றுக்கொண்டேன். அப்போது வாங்கிச்சென்ற பணத்தை புகைப்படம் எடுத்து நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். அதை

என்னால் அடையாளம் காட்ட முடியும். **புகைப்படங்களின் எண்ணிக்கை 3. அ.சா.பொ.1.** திருடியவர்களை பற்றி விபரம் எதுவும் நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. போலீசார் என்னை வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

கு.வி:

முதல் விசாரணையில் சொன்னதுபோல் தான் புகாரிலும் போலீசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். நான் திரும்பி வந்த 11.04.2014 ஆம் தேதி அன்று புகார் கொடுத்தேனா என்றால் இல்லை ஒரு வாரம் கழித்து தான் புகார் கொடுத்தேன். என் கடையில் வேலை பார்க்கும் ஆட்கள் உள்ளார்களா என்றால் இல்லை. நான் பி.ஏ., படித்துள்ளேன். புகாரை நான் தான் எழுதிக்கொடுத்தேன். என் கடையின் வரவு செலவு கணக்குகளை நான் முறையாக பராமரித்து வருகிறேன். சம்பவம் நடைபெற்ற தினத்தில் என் கடையில் எவ்வளவு விற்பனையானது எவ்வளவு வருமானம் வந்தது எவ்வளவு இருப்பு தொகை இருந்தது ஆகிய வரவு செலவு கணக்குகளை காவல் துறையிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. நான் கடை வைத்திருக்கும் பகுதி அதிகமாக மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். விநாயகர் கோவில் அருகில் ஜவுளிக்கடை மற்றும் நகைகடை அருகில் ஆட்டோ ஸ்டேன்டு இருந்து வருகிறது என்றால் சரிதான். நான் சென்னையில் இருக்கும்போதே என் கடை உடைக்கப்பட்டிருந்த விபரம் எனக்கு தெரியும். உண்மையிலேயே என் கடை உடைக்கப்பட்டிருந்தால் நான் எனது உறவினர் மூலம் புகார் கொடுத்திருப்பேன் என்றும் அவ்வாறு சம்பவம் நடைபெராத காரணத்தினால் தான் நான் காலதாமதமாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றும் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

ம.வி:

இல்லை.